தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 5, திருவள்ளுவர் ஆண்டு-2044

2013 ஏப்ரல் 18, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு."

ஊற்று நீர், மழை நீர் ஆகிய இருவகை நீர் வளமும், மலை வளமும், அதிலிருந்து அருவியாகக் கொட்டி ஆறாகப் பெருகிவரும் ஆற்று நீர் வளமும், வலிமைமிக்க கோட்டையும் ஒரு நாட்டின் உறுப்புகள் ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 253, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

253—

மின்மாற்றி

***17431—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் தொகுதியில் 16 MVA திறனுடைய கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதியில் கூடுதலாக 16 MVA மின் திறனுடைய மின்மாற்றி அமைப்பதற்கு ரூபாய் 1.5 கோடி செலவில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூடுதல் மின்மாற்றி இன்னும் ஒரு மாதத்தில் நிறுவப்பட்டு, இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்ற தமிழர்களின் பாரம்பரியமிக்க மரபினை, தன் சுய விளம்பரத்திற்காக மாற்றி அமைத்த சுய நலத் தலைவர்களுக்கு, தமிழினத்தின் வரலாற்றுப் பாடத்தினை ஆதாரத்தோடு கற்றுக் கொடுத்து, சிறைப்பட்டுக் கிடந்த சித்திரையை மீட்டு, சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என மீண்டும் அகிலத்திற்கு அடையாளம் காட்டி, தமிழர்களின் வாழ்வெல்லாம் வசந்த காலமாக வரலாறு படைத்திட்ட, வழிகாட்டியாக வாழும் மனித தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த உலகத் தமிழினமும் போற்றி வணங்கி வருகின்ற நம் தமிழ்த் தாய், நாளைய பாரத தேசத்தைத் தலைமை தாங்கி, நல்வழி நடத்த இருக்கின்ற நம் தெய்வத் தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதப் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதிக்குட்பட்ட சாத்தூர் நகரத்தில் அமைந்துள்ள 110/11 KV துணை மின் நிலையத்தில், கூடுதலாக 16 MVA திறன் மின்மாற்றி அமைத்துத் தர ஆவன செய்திட்ட, எல்லாரும் எல்லாமும், பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை*

2013 ஏப்ரல் 18]

வேண்டுமென்ற இலட்சிய முழக்கத்தை நிறைவேற்றிட, இரவு, பகல் பாராது, ஊன் உறக்கம் பாராது, அயராது உழைத்து வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கோரிக்கை வைத்து, அது இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு முன்பாகவே நிறைவேற்றித் தருகின்ற தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, சாத்தூர் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றியைக் கூறி, தற்போது, சிவகாசி அனுப்பன்குளம் துணை மின் நிலையத்திலிருந்து சாத்தூர் துணை மின் நிலையத்திற்கு வரக்கூடிய 110 KV உயர் மின்னழுத்த ஒரு வழிப் பாதையை, இரு வழிப் பாதையாக கம்பிவடம்மூலம் அமைத்துக் கொடுத்திட அன்போடு வேண்டுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் இரு வழிப் பாதை அமைப்பதற்கு வேண்டிய சாத்தியக்கூறுகள், அங்குள்ள மின்பளுவின் தேவையைக் கருத்தில்கொண்டு ஆய்வு செய்து, தேவையிருப்பின், நிதி நிலைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: இரு வழிப் பாதையை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அன்னைத் தமிழகத்தை இந்தியத் திருநாட்டின் முதன்மை மாநிலமாக மாற்றிட, வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை வாரி, வாரிக் கொடுத்து, சாதனை வரலாறு படைத்து வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சாத்தூர் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைக் கூறி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.*

திரு. கே.பி. நாகராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டமன்றத் தொகுதியில் தட்டணை கிராமத்தில் ஐந்தாயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். அதைச் சுற்றி 15 குக்கிராமங்கள் இருக்கின்றன. அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களிடத்திலே அதற்குரிய தொகையும் செலுத்தப்பட்டு, கடந்த நிதியாண்டிலே அது கட்டித் தரப்படும் என்றார்கள். அது எப்போது கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மயிலம் பகுதியிலே துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 254, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

254—

பாலாற்றுக் குடிநீர்

***5985—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—